*7*

# "ஆண்டவரே, எதுவரைக்கும்?"

## (1:1–8)

யூதர்களின் முற்பிதாக்களைத் தேவன் எகிப்தில் இருந்து வெளியே, "மகா பலத்தினாலும் வல்லமையுள்ள கையினாலும்" கொண்டு வந்தது எப்படி (யாத்திராகமம் 32:11) என்ற விபரத்தைக் காட்டிலும் வேறு எந்த வரலாறும் யூதர்களுக்கு அதிகமான ஆறுதலைக் கொண்டு வந்ததில்லை. இஸ்ரவேல் மக்கள் எகிப்தியர்களால் ஒடுக்கப்பட்டுக் கிடந்தபோது, அவர்கள் தேவனிடத்தில் கூக்குரலிட்டனர், தேவன் "அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டார்" (யாத்திராகமம் 3:7) மற்றும் அதனிமித்தம் மனம் உருகினார். இவ்விதமாக, பாலைவனத்தில் ஒருநாள், எரியும் புதருக்கு முன்பாக நின்று கொண்டிருந்த மோசே, பின்வரும் திகைப்புக்குரிய வார்த்தைகளைக் கேட்டார்:

> நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். … எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, … பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன். இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது. எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன் (யாத்திராகமம் 3:6-9).

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் தொடக்க வார்த்தைகளை நான் படிக்கையில், பார்வோனின் கீழ் இஸ்ரவேல் மக்கள் ஒடுக்கப்பட்டது மற்றும் பேரரசர் டொமீஷியனின் கீழ் கிறிஸ்தவர்களின் வேதனை ஆகியவற்றிற்கு இடையில் உள்ள ஒற்றுமைத் தன்மைகளினால் தாக்கப் பட்டேன். இஸ்ரவேல் மக்களின் வருத்தம் நிறைந்த கூக்குரலுக்குத் தேவனின் பதில்செயலானது, துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களின் ஊக்கமான ஜெபங்களுக்கு அவருடைய பதில்செயலுடன் குறிப்பிடத்தக்க வகையில் ஒத்த தன்மையுடையதாக இருந்தது.

கிறிஸ்தவர்கள் நிம்மதிக்காகத் தேவனிடத்தில் வேண்டுகோள் விடுத்தனர். அதிகாரம் 6ல் நாம், "தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய" என்று வாசிக்கின்றோம் (6:9). அவர்கள் உரத்த குரலில், "பரிசுத்தமும் சத்தியமு முள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?" என்று கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர் (6:10). பொறுமையற்ற அந்த வேண்டுதலானது "உபத்திரவத்தில்" (1:9) இருந்த "பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடு" (8:3; 5:8; 8:4ஐயும் காணவும்) ஒன்றுகலக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள், "தேவன் இடைப்படு வதற்கு இன்னமும் எவ்வளவு காலம் ஆகும்? நாம் நிரபராதிகள் என்று நிரூபணம் ஆக எவ்வளவு காலம் ஆகும்?" என்று வியப்புற்று இருந்திருக்க வேண்டும். அவர்களின் இந்தக் கேள்விகள் கேட்கப்பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், அவற்றிற்கு வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமே தேவனுடைய பதிலாக இருந்தது. பாலைவனத்தில் மோசேக்குத் தேவன் ஆறுதலின் செய்தி ஒன்றைக் கொண்டு வந்தார்; இப்போது அவர், பத்மு தீவில் யோவானுக்குத் தேறுதலின் வார்த்தைகளைக் கொண்டு வந்தார்.

இந்தப் பாடத்தில் நாம், வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் எட்டு வசனங்களைப் பற்றிப் படிப்போம். முதல் பார்வையில் இந்த வசனங்கள், இந்தப் புத்தகத்திற்கான வெறும் அறிமுகம் போன்றே காணப்படுகின்றன, ஆய்வுக்கருத்தை நோக்கி விரைந்து செல்லும்படிக்கு நாம் சோதிக்கப் படலாம் - அதிலும் விசேஷமாக, நாம் இந்தச் சொற்றொடர்களில் பலவற்றை முன்னமே விளக்கியுரைக்கக் கேட்டிருப்பதால் நாம் அவ்வாறு சோதிக்கப்படலாம்.[1] இருப்பினும், ஆழ்ந்து சிந்திக்கையில் இவ்வசனப் பகுதியானது நமது படிப்பிற்கு உள்தொனியை/குறிப்புப் பொருளை/ செயலூக்கத்தை/வழிமுறையை அமைக்கிறது.

## "எதுவரைக்கும் நீர் எங்களுக்கு உதவ வராதிருப்பீர்?" (1:1, 2)

இந்தப் புத்தகம் பின்வருமாறு தொடங்குகிறது:

> *சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும்பொருட்டு, தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினது மான விசேஷம். இவன் தேவனுடையவசனத்தைக் குறித்தும், இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான் (1:1, 2).*


"வெளிப்படுத்தின விசேஷம்" என்ற வார்த்தைகள், "மூடுதலைத் திறத்தல்" அல்லது "முக்காட்டை நீக்குதல்" என்று அர்த்தப்படுகிற

*apokalupsis* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. மாபெரும் கலைஞர் ஒருவரால் சமீபத்தில் உருவாக்கப்பட்ட திறமைமிகுந்த படைப்பு ஒன்று பார்வையாளர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டதை உங்கள் சிந்தையில் சித்தரித்துக்கொள்ளவும். எதிர்பார்ப்பு வளர்ந்துள்ளது; யூகம் உச்சகட்டத்தை அடைந்துள்ளது. கடைசியில் அந்த வேலைப்பாட்டின் மீதிருந்த திரை அகற்றப்பட்டவுடன், அதன் பெருஞ்சிறப்பைக் கண்ட கூட்டம் பெருமூச்சு விடுகிறது. இதேபோன்ற வகையில், ஆறுதலுக்கான தேவனுடைய தலைசிறந்த கலைப்படைப்பு, வெளிப்படுத்தின விசேஷத்தில் நாடகத்துவமாகத் திரை அகற்றப்படுகிறது.

இந்தப் புத்தகம், "இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்துதல்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இது, "(1) இயேசு கிறிஸ்துவினால் அல்லது இயேசுகிறிஸ்துவிடமிருந்து வெளிப்படுத்தப்பட்டது, (2) இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் அல்லது (3) மேற்கூறிய இரண்டு மென்று அர்த்தப்படக்கூடும்."[2] இந்த வசனம் முழுவதும், இது இயேசு யோவானுக்குக் கொடுத்த வெளிப்படுத்துதல் என்ற கருத்தை ஆதரிக்கலாம், ஆனால் இந்தப் புத்தகம் இயேசுவைப் பற்றியும் அதிகம் வெளிப்படுத்து கிறது.

முதல் வசனத்தில் இருந்து மூன்று உண்மைகள் வலியுறுத்தப்பட வேண்டும்: (1) இந்தச் செய்தியைத் தேவனே இயேசுவுக்குக் கொடுத்தார்.[3] (2) அவர் இந்தச் செய்தியை "தமது ஊழியக்காரரின்"[4] - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தமது மக்களின் (ரோமர் 6:17, 18) பயனுக்காகக் கொடுத்தார். (3) அவர் "சீக்கிரத்தில் நடக்க இருப்பவற்றை"[5] தமது ஊழியக்காரருக்குக் காண்பிப்பதற்காக இந்தச் செய்தியைக் கொடுத்தார். "சீக்கிரத்தில்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, "விரைவில்" அல்லது "உடனடியாக" என்று அர்த்தப்படுகிறது.[6] "ஆண்டவரே, எதுவரைக்கும்?" (6:10) என்ற கூக்குரலுக்குத் தேவன் பதில் அளித்தார்: "தைரியமாய் இருங்கள்; இனியும் நாட்கள் செல்லாது! உங்களை மீட்கவும் உங்கள் விரோதிகளைத் தண்டிக்கவும் நான் வந்துகொண்டிருக் கின்றேன்!"

தேவன் இந்தச் செய்தியைத் தமது மக்களிடம் சேர்ப்பிப்பதற்கு வெளிப் படுத்துதலின் ஒரு தொடர் நிகழ்வைப் பயன்படுத்தினார். செய்தியைத் தேவன் இயேசுவிடம் ஒப்புவித்தார். அந்தச் செய்தியை எடுத்துச் செல்ல ஒரு தூதனை இயேசு அனுப்பினார் (22:8, 16ஐக் காணவும்), அவர் தேவனுடைய மக்களை ஊக்குவிப்பதற்காக அந்தச் செய்தியை யோவானுக்கு வெளிப் படுத்தினார்.




"யோவான்" என்பவர் அப்போஸ்தலரான யோவானாக இருந்தார், அனேகமாக இவர் ஒருவர் மாத்திரமே அவ்வேளையில் உயிருடன் இருந்த அப்போஸ்தலராய் இருந்திருக்கலாம். இந்தச் செய்தியின் அதிகாரத்துவம்

பற்றிய தமது சொந்த உத்தரவாதத்தை அவர் தமது வாசகர்களுக்குக் கொடுத்தார்: அவர், "தேவனுடைய வசனத்தைக்குறித்தும், இயேசுகிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக்குறித்தும், தான் கண்டயாவற்றையும் சாட்சியாக அறிவித்திரு"ப்பதாகக் கூறினார் (1:2).[7]

வெளிப்படுத்துதலின் இந்தத் தொடர் நிகழ்வில் தேவன் ஒரு தூதனைப் பயன்படுத்துதல் என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. மோசே வனாந்தரத்தில் இருந்தபோது, "கர்த்தருடைய *தூதனானவர்* ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார்" (யாத்திராகமம் 3:2). அது போலவே, தேவன் தமது மக்களின் கூக்குரலைக் கேட்டிருந்தார் என்பதை யோவானுக்குக் கூறுவதற்கு அவர் (தேவன்) ஒரு தூதனை அனுப்பினார்.

தேவன் தமது மக்களின் ஜெபங்களைக் கேட்டு அதற்குப் பதில் அளிக்கின்றார் என்பதை உணர்ந்து அறிதல் முக்கியமானதாக உள்ளது. அமைதியான இரவில் பயம் நம்மை மேற்கொண்டு வருத்தம் நம்மை விழுங்கப் போவதாக அச்சுறுத்தும்போது - ஆண்டவரிடத்தில் நாம் எழுப்பும் கூக்குரலானது இருளால் விழுங்கப்பட்டதாகக் காணப்படும் வேளையில் - சங்கீதம் 34:15ன் வார்த்தைகளை நாம் நினைவில் கொண்டிருக்க வேண்டியது அவசியமாகிறது: "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது." பேதுரு கூறியபடி, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது" (1 பேதுரு 3:12அ)!

## "எதுவரைக்கும் நீர் எங்களை மறுபடியும் ஆசீர்வதியாமல் இருப்பீர்?" (1:3)

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்திற்கே உரிய தனிச்சிறந்த ஒரு ஆசீர்வாதத்தை, வசனம் 3ல் நாம் காணுகின்றோம்: "இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது." "வாசிக்கிறவனும்" என்பது சபையின் பொதுக் கூடுகைகளில் வேதவசனங்களை வாசிப்பவரைக் குறிப்பிடுகிறது.[8] அந்த நாட்களில், வாசித்தல் என்பது பலரால் முடியாததாக இருந்தது - மற்றும் ஒருசிலர்தான் வேதவசனங்களின் பிரதி ஒன்றை வாங்க முடிந்திருந்தது. தங்களுடைய வாழ்க்கைக்கான தேவனுடைய சித்தத்தை மக்கள் அறிய வேண்டுமென்றால், பொதுக் கூடுகைகளில் வசனத்தை வாசித்தல் என்பது அவசியமாய் இருந்தது (ரோமர் 10:17).[9] இன்றைய நாட்களில் வேதாகமங்கள் ஏராளமாய் இருக்கின்றன, ஆனால் வாசித்தலுக்கு "கருத்துணர்வைத் தரக்" கூடியவர் களால் வசனம் வாசிக்கப்படுதலைக் கேட்டல் என்பது இன்னமும் நமக்கு அவசியமானதாக உள்ளது. (நெகேமியா 8:8ஐக் காணவும்.)

வெளிப்படுத்தின விசேஷம் அறிவிக்கப்படுதலோடு கூட, அது

*கேட்கப்படவும்[10] கைக்கொள்ளப்படவும்[11] வேண்டும் என்பதை வசனம் 3 வலியுறுத்துகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தை "தீர்க்கதரிசனம்" என்று யோவான் அடையாளப்படுத்திய போது, இதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். வெளிப்படுத்தின விசேஷமானது தேவனிடத்திலிருந்து வந்துள்ளது என்பதை "தீர்க்கதரிசனம்" என்ற குறிப்புப் பெயர் வலியுறுத்து கிறது,[12] எனவே இதை இலேசானதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. வெளிப்படுத்தின விசேஷத்தில் நேரடியான மற்றும் மறைமுகமான கட்டளைகள் ஏராளமாக உள்ளன.[13] அந்தக் கட்டளைகளைக் கேட்டலும் கடைப்பிடித்தலும் விருப்பத் தேர்வாக இருப்பதில்லை.*

*மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்துகையில், அவர்களுக்கு அவர் "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, … அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொ(ள்வாயாக)" என்று அறிவுறுத்தினார் (யாத்திராகமம் 15:26). அவர்கள் அவ்வாறு செய்தால், ஆசீர்வதிக்கப்படுவார்கள் (யாத்திராகமம் 23:22). அதுபோலவே, யோவான் தமது நாட்களில் இருந்த சுற்றிவளைக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தின் வாக்குத்தத்தங்கள் விசுவாசத்துடன் நிலைத்திருப்பவர்களுக்கு மட்டுமே உரியவை என்று கூறினார் (2:10).*

*அந்தச் செய்தியானது இன்றைக்கு இன்னமும் தேவைப்படுகிறது. நமது வழியில் இடர்ப்பாடு வருகிறபோது, தேவனுடைய சித்தங்களுக்கு நமது சித்தங்கள் ஒப்புவிக்கப் படவில்லையென்றால், அவர் நம் வாழ்வில் செயல் பட இயலாது. இயேசு, "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" என்று கூறினார் (யோவான் 13:17; யாக்கோபு 1:22ஐயும் காணவும்). இன்றைய நாட்களில் பாடப்படும் உலகப் பிரகாரமான பாடல் ஒன்று பலரின் தத்துவத்தைப் பிரதிபலிக்கிறது: "எனது வழியில் இதை நான் செய்தேன்." நாம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்றால், அழகிய பாடலான "உந்தன் சித்தம்போல் நடத்தும் என் தேவனே, என் கர்த்தரே!" என்பதில் வெளிப்படுத்தப்படுகிற எண்ணப்போக்கை வளர்த்துக் கொள்ள வேண்டும்.*

*தொடக்க காலக் கிறிஸ்தவர்களுக்கு வசனம் 3ல் மிகவும் உற்சாகம் ஊட்டக்கூடிய பகுதி, "காலம் சமீபமாயிருக்கிறது" என்ற வார்த்தைகளில் கண்டறியப்பட்டது.[14] "சமீபமாயிருக்கிறது" என்ற சொற்றொடர், மாற்கு 1:15ல் "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று, மனந் திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" என்று கூறப்பட்டபோது, சமீபமாயிற்று என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே கிரேக்க வார்த்தையாக உள்ளது. மாற்கு 1:15ல் உள்ள அறிவிப்பு, இராஜ்யமானது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு நிலைநாட்டப்பட வேண்டும் என்று அர்த்தப்படுவதாய் இருக்கவில்லை. மாறாக, அதைப்பேசியவர், இராஜ்யம் நிலைநாட்டப்படுவதற்கான வேளை கடைசியாக வந்து சேர்ந்திருந்தது என்று கூறினார். அதுபோலவே, அப்போஸ்தலரான யோவான், தமது நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, தேவனுடைய ஆசீர்வாதங்கள் எதிர்காலத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்பு கிடைக்கும் என்று கூறாமல், அப்போதே கிடைக்கும் என்று கூறினார். "ஒரு சபையானது அதன் முதுகை*

*கட்டிடத்தினுடைய பின்சுவருக்கு அருகில் வைத்துத் தனது வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும்போது, அதற்கு இருபது நூற்றாண்டுகளுக்குப் பின்பு என்ன நடக்கப் போகிறது என்பதைக் கூறுவதற்கான ஆகாய கால அட்டவணை அந்த வேளையில் தேவைப்படவில்லை. இயேசு கிறிஸ்து அங்கிருக்கின்றார், அதன் வாழ்வின்மீது இப்போதே (அந்த வேளை யிலேயே) அவர் அக்கறையாய் இருக்கின்றார் என்பதை அது அறிவது அவசியமாயிருந்தது."*[15]

அவ்வப்போது நீங்களும் கூட தோல்வியுற்றதாக, தனிமையில் இருப்ப தாக உணரலாம். விஷயம் அதுவாக இருக்கும்போது, இடர்ப்பாட்டில் தேவன் *எப்போதும் தயாராயிருக்கின்ற* உதவியாக இருக்கின்றார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் (சங்கீதம் 46:1-7). முதல் நூற்றாண்டில் இடர்ப்பாட்டில் இருந்த கிறிஸ்தவர்களை ஆசீர்வதிக்க தேவன் *தயாராய்* இருந்தார். அவர் உங்களையும் ஆசீர்வதிக்க தயாராக இருக்கின்றார்!

## "எதுவரைக்கும் நீர் எங்கள் பாடுகளைக் கண்ணோக்காது இருப்பீர்?" (1:4)

வசனம் 4 முதல் 7 வரையுள்ள பகுதியானது யோவானின் நாட்களில் கடிதங்கள் எழுதப்படுவதற்குக் கடைப்பிடிக்கப்பட்ட வழக்கமான நடை முறை வடிவத்தைப் பின்பற்றுகிறது. கடிதங்கள் முதலாவது எழுது பவரையும் பெற்றுக்கொள்பவரையும் அடையாளப்படுத்தின. இவ்விதமாக நாம், "யோவான் ஆசியாவிலுள்ள ஏழு சபைகளுக்கும் எழுதுகிறதாவது" என்று வாசிக்கின்றோம் (வசனம் 4அ). ''ஆசியா'' என்பது ஆசியாக் கண்டத்தையல்ல, ஆனால் மேற்குக் கடற்கரையில், உள்ள இப்போது துருக்கி என்று அழைக்கப்படுகிறதான, ஆசியா என்ற ரோம மாகாணத்தைக் குறிப்பிடுகிறது.[16] இந்த அதிகாரத்தின் பிற்பகுதியில் ஏழு சபைகள் பட்டியலிடப் படுகின்றன: இவைகள், எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா மற்றும் லவோதிக்கேயா ஆகிய நகரங்களில் கூடிவந்த சபைக்குழுமங்களாகும் (வசனம் 11).

அந்த மாகாணத்தில் ஏழுக்கும் அதிகமான சபைக்குழுமங்கள் கூடி வந்திருந்தபடியால், "ஏன் இந்த ஏழு (சபைக்குழுமங்கள்)?" என்ற கேள்வி பொதுவாக, கேட்கப்படுகிறது. கற்றறிந்த யூகங்கள் சிலவற்றை நாம் ஏற்படுத்த இயலும்: (1) இந்தப் புத்தகத்தில் "ஏழு" என்ற எண்ணுக்குத் தரப் பட்டுள்ள வலுயுறுத்தத்தை சிந்தையில் கொண்டு, ஏழு சபைக்குழுமங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம். (2) இந்த ஏழு சபைக்குழுமங்கள், அந்த மாகாணத்தின் உள்ள எல்லையைச் சுற்றிச் சென்ற ஒரு சாலையில் இருந்ததால் இவைகள் தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கலாம்; அவர்களிடம் இருந்து ஆறுதலின் செய்தியானது அந்தப் பகுதி முழுவதிலும் பரவக்கூடும். (3) இந்த ஏழு சபைகள் அந்த நாட்களிலும் மற்றும் எந்த நாட்களிலும் உள்ள சபைக்குழுமங்களுக்கு மாதிரிகளாக இருந்தபடியால் இவைகள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கலாம்.

"ஆசியாவில் இருந்த ஏழு சபைகள் ஏன் (தேர்ந்து கொள்ளப்பட்டன)?"

என்ற கேள்வி மிகவும் பொருத்தமானதாக இருக்கலாம். வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், ரோமப்பேரரசு முழுவதிலும் சபைக்குழுமங்கள் நிலைநாட்டப்பட்டிருந்தன, எனவே இந்தக் கடிதங்கள் ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு மாத்திரம் அனுப்பப்பட்டது ஏன்? அங்குதான் ரோமர்களின் துன்புறுத்துதல் மிகவும் கொடுமையானதாக இருந்தது; அங்குதான் கிறிஸ்தவர்கள் அதிகமாகத் துன்பப்பட்டனர். இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன: (1) பேரரசரை ஆராதித்தல் என்பது ஆசியாவில் மிகவும் பலங்கொண்டிருந்தது. "சீஸருக்கு (இராயனுக்கு) ஆராதனை செய்யும் மார்க்கம் ஆசியாவில் மிகவும் பிரபலமாய் இருந்தது. ஆசியா என்பது மார்க்கப்பிரிவுகள் மற்றும் எல்லா வகையான பொருளற்ற செய்கைக்கும் வளம்பொருந்திய பூமியாக இருந்தது, நாட்டுப்பற்று, மதம் மற்றும் மாயாவாதம் ஆகியவை திறமையுடன் இணைக்கப்பட்ட இந்த மார்க்கம் இந்தப் பகுதியைக் காட்டிலும் அதிகமான வரவேற்பை வேறு எந்தப் பகுதியிலும் பெற்றிருந்ததில்லை."[17] (2) ஆசியாவில் கிறிஸ்தவம் மிகவும் பலம் பொருந்தியதாக இருந்தது. கி.பி.70 க்குப் பின்பு இந்த மாகாணம் "கிறிஸ்தவத்தின் பிரதான கோட்டையாயிற்று."[18] பேரரசரை ஆராதித்தல் என்பதைக் கிறிஸ்தவர்கள் உக்கிரமாக எதிர்த்து நின்றதால், போராட்டம் தவிர்க்க இயலாததாயிற்று. ஆசியாவில் வாழ்ந்திருந்த கிறிஸ்தவர்கள் மீது ரோமத் தண்டனையின் தாக்குதல் முழுவேகத்தில் விழுந்தது.

தேவை எங்கிருந்தது என்பதைத் தேவன் *அறிந்தார்*. தேவன் தமது பிள்ளைகள் எவ்விடத்தில் வேதனையில் இருந்தனர் என்பதை அறிந்தார், மற்றும் அவர் தமது ஆறுதல் தேவைப்பட்ட இடத்தை நோக்கி அதைத் திருப்பினார். அவர் மோசேயினிடத்தில் வந்தபோது, " ... எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து ... அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்" என்று கூறினார் (யாத்திராகமம் 3:7) பெர்கமுவில் இருந்த சபைக்கு அவர், "... சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும் ... அறிந்திருக்கிறேன்" என்று கூறினார் (2:13) - அவ்விடத்தில் சாத்தான் மிகவும் வல்லமை நிறைந்தவனாக இருந்தான். தேவன் இன்னமும் அறிகின்ற தேவனாகவே இருக்கின்றார். உங்கள் இருதயம் உடைந்து போகும்போது அதைத் தேவன் அறிகின்றார். வாழ்வின் சுமைகள் உங்களை மூழ்கடிக்கப்போவதாகப் பயமுறுத்தும்போது, தேவன் அதை அறிகின்றார். இனியும் என்னால் தாங்க இயலாது என்று நீங்கள் உணரும்போது, தேவன் அதை அறிகின்றார். "தேவன் ... சகலத்தையும் அறிந்திருக்கிறார்" (1 யோவான் 3:20)!

## "எதுவரைக்கும் நீர் எங்களுக்கு உறுதியளிக்காது இருப்பீர்?" (1:4, 5)

அந்த நாட்களில் எழுதப்பட்ட கடிதங்களில், அடுத்ததாக வாழ்த்துரை வந்தது. யோவான், "உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று எழுதினார் (வசனம் 5ஆ;).[19] "கிருபை" என்பது

தகுதியற்றவருக்குத் தேவன் தரும் ஈவாக உள்ளது; "சமாதானம்" என்பது நமது வாழ்வில் தேவனுடைய செயலின் விளைவாக உள்ளது. யோவானின் வாசகர்கள் தேவனுடைய கிருபை தங்களுக்கு மறுஉறுதிப்படுத்தப்படுவதை ஏக்கத்துடன் எதிர்பார்த்திருந்தனர், அவர்களின் இருதயங்கள் அவரது சமாதானத்திற்காக ஏங்கி வேதனைப்பட்டன என்பதில் சந்தேகம் இல்லை.

ஆகையால் யோவான், இந்த வாழ்த்துதல் "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும்,[20] அவருடைய சிங்காசனத்திற்குமுன்பாக[21] இருக்கிற ஏழு ஆவிகளாலும், உண்மையுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின்ராஜாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்து வினாலும்" உண்டாவதாக என்று கூடுதலாகக் கூறினார் (வசனங்கள் 4ஆ, 5அ). இந்தச் சொற்றொடர், வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது, ஆனால் யோவான் தேவத்துவத்தைப் - பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்பவர்களைப் - பற்றிப் பேசினார்: (1) "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும்" என்பது, சந்தர்ப்பப் பொருளில், நித்தியமான தேவனாகிய பிதாவைக் குறிப்பதாக இருக்க வேண்டும்.[22] (2) "அவருடைய சிங்காசனத்திற்குமுன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்" என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்.[23] ஒரே ஒரு ஆவியானவர் மாத்திரமே இருப்பதால் (எபேசியர் 4:4), "ஏழு" என்பது "பூரணத்துவம்" அல்லது "பரிசுத்த முழுமைத்தன்மை" என்ற அதன் அடையாளத் தனிச்சிறப்புடன் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.[24] "ஏழு ஆவிகள்" (அல்லது NIV வேதாகமத்தின் அடிக்குறிப்பில் உள்ளபடி, "ஏழு மடங்கு ஆவிகள்") என்ற சொற்றொடரானது, தேவனுடைய சித்தத்தைச் செயல்படுத்துவதற்குப் பரிசுத்த ஆவியானவர் கொண்டுள்ள பூரணத்துவ மான வல்லமையைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். (3) "திரித்துவம்" என்பதன் பட்டியல், குமாரனாகிய "இயேசு கிறிஸ்து"வின் பெயரைக் கொண்டு நிறைவடைகிறது.

பிதாவாகிய தேவனை விவரிக்க யோவான் பயன்படுத்திய சொற் றொடர் அவரது வாசகர்களுக்கு வல்லமைநிறைந்த மறைவான கருத்துக் களைக் கொண்டிருந்திருக்க வேண்டும். மோசேயினிடத்தில் தேவன் தமது மக்களை (பார்வோனின் ஒடுக்குதலில் இருந்து) விடுவிக்கும்படி கூறியபோது, மோசே மறுப்புரைத்தார்: "நான் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் போய், உங்கள் பிதாக்களுடைய தேவன் உங்களிடத்தில் என்னை அனுப் பினார் என்று அவர்களுக்குச் செல்லும்போது, அவருடைய நாமம் என்ன என்று அவர்கள் என்னிடத்தில் கேட்டால், நான் அவர்களுக்கு என்ன சொல்லுவேன்?" (யாத்திராகமம் 3:13). மோசேயினிடத்தில் தேவன், "இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக" என்று கூறினார் (யாத்திராகமம் 3:14). "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள சொற்றொடரானது வெளிப்படுத்தின விசேஷம் 1:4ல், "[யாத்திராகமம்] 3:14ன் இருக்கிறவராக இருக்கிறேன் என்பதன் கிரேக்க மொழி வடிவமாக உள்ளது."[25]

பழைய ஏற்பாட்டிற்கு நன்கு பழக்கப்பட்டுள்ள வாசகர்கள், இஸ்ரவேல் மக்களைத் தேவன் விடுதலையாக்கியதில் அடங்கியுள்ள யாவற்றையும் நினைவுபடுத்தப்படாமல், வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவனுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள இந்தக் குறிப்புப் பெயரைக் கேட்டறியமுடியாது. அவர்கள், மோசேயும் ஆரோனும் தாங்கள் கர்த்தரிடத்தில் இருந்து வந்திருந்ததைப் பார்வோனுக்கு நிரூபிப்பதற்கு மாபெரும் அடையாளங்களைச் செய்யக் கூடியவர்களாகத் தேவன் அவர்களுக்குப் பலம் அளித்திருந்த விஷயத்தை நினைவுகூர்ந்திருப்பார்கள். அவர்கள் - தண்ணீர் இரத்தமாக மாறியது தொடங்கி நடைபெற்ற - பத்து வாதைகள் மாகாபலம் பொருந்திய எகிப்து நாட்டை மண்டியிடச் செய்ததை நினைவுகூர்ந்திருப்பார்கள்.

ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், பார்வோன் அரசரால் பயமுறுத்தப் பட்டிராத தேவன், சீஸரால் (இராயனால்) பயமுறுத்தப்பட்டிருக்க மாட்டார் என்று உறுதிப்படுத்தப் பட்டிருப்பார்கள். கடந்த காலத்தில் எகிப்தில் இருந்து தமது மக்களை விடுவித்திருந்த தேவன், அவர்களின் நாட்களிலும் தமது மக்களை விடுவிக்க முடியும், ஏனெனில் தேவன் இன்னமும் கட்டுப்பாடு செலுத்திக் கொண்டிருந்தார். நீங்களும் நானும் கூட, நமது பிரச்சனைகளில் இருந்து தேவன் நம்மை விடுவிக்க முடியும் என்று உறுதிப்படுத்தப்பட வேண்டும். நமது தேவன், "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராக" இருக்கின்றார்!

## "எதுவரைக்கும் நீர் கட்டுப்பாடு செலுத்தாது இருப்பீர்?" (1:5, 6)

வசனங்கள் 4, 5ல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோரை யோவான் பட்டியலிட்டபோது, அந்த அதிகாரத்தின் எஞ்சிய பகுதி முழுவதும் இயேசுவைப் பற்றியதாக இருப்பதால், அவர் இயேசுவைக் கடைசியாகக் குறிப்பிட்டார். இயேசு யாராயிருக்கின்றார் என்று கூறுவதன் மூலம் அவர் மீதான வலியுறுத்தத்தை யோவான் தொடங்கினார்: "உண்மை யுள்ள சாட்சியும், மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், பூமியின் ராஜாக் களுக்கு அதிபதியுமாகிய இயேசுகிறிஸ்து" (வசனம் 5அ). ஒவ்வொரு சொற் றொடரும் யோவானின் வாசகர்களை ஆறுதல் படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டிருந்தது:

*"உண்மையுள்ள சாட்சி."* இயேசுவின் வாழ்வு முழுவதிலும் அவர் தேவனுடைய சித்தத்திற்கு சாட்சியம் கொடுத்தார் (யோவான் 3:32; 18:37),[26] ஆனால் இவ்விடத்தில் அது அதற்கும் அதிகமான அர்த்தம் கொண்டுள்ளது. "சாட்சி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம் "வேதசாட்சியாக மரித்தவர்" என்பதைப் பெறுகின்றோம்; இயேசு "மரணபரியந்தமும்" (பிலிப்பியர் 2:8) உண்மையுள்ள சாட்சியாக இருந்தார்.[27]

*"மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்."*[28] இயேசுவின் சரீரம் கல்லறையில் அப்படியே இருந்துவிடவில்லை. அவர் மரணத்தை வெற்றிகொண்டு,

*மறுபடியும் மரணம் அடையாத வகையில் எழுப்பப்பட்ட வர்களில் முதல் வரானார்! அவர், மரணத்தினால் பயமுறுத்தப்பட்டவர்களிடத்தில், "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்று கூறினார் (வசனம் 18). கிறிஸ்தவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்ற வாக்குறுதியைக் கொண்டிருந்தனர் (கொண்டுள்ளனர்) (1 கொரிந்தியர் 15:54-57)!*

*"பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி." இயேசு உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்பு, அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்றார், அங்கு அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்தார். அவர் அங்கிருந்துகொண்டு "நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாக" நம்மை ஆளுகை செய்கின்றார் (1 தீமோத்தேயு 6:15; வெளிப்படுத்தின விசேஷம் 19:16ஐயும் காணவும்).[29] சீஸர் (இராயன்) இந்த உலகத்தின் அதிபதியாக இருந்ததில்லை; இயேசுவே அதிபதியாய் இருந்தார்/இருக்கின்றார் - மற்றும் அவர் இந்த சத்தியத்தைச் செயல்விளக்கப் படுத்துவதற்குத் தயாராகிக்கொண்டிருந்தார்!*

*இயேசு யாராயிருக்கின்றார் என்பதை யோவான் விளக்கப்படுத்திய பின்பு, அவர் அகத்தூண்டுதலான ஒரு துதியை எழுதினார்: "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, தம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென் றைக்கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (வசனம் 6). யோவான் தமது வாசகர் களுக்கு இயேசு செய்திருந்ததை நினைவூட்டிக்கொண்டிருந்தார்.*

*அவர், "நம்மிடத்தில் அன்புகூருகின்றார்." "அன்புகூர்ந்து" என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது நிகழ்கால வினைச் சொல்லாக உள்ளது, இது தொடர்ந்து செய்யப்படும் ஒரு செயலை குறிக்கிறது.[30] இயேசு தமது அன்பை, இந்த பூமிக்கு வந்ததன் மூலமாகவும், சிலுவையில் மரித்ததன் மூலமாகவும் செயல்விளக்கப்படுத்தினார், மற்றும் அவர் நம்மைக் கவனித்தல் மற்றும் நம்மைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் மூலமாகத் தமது அன்பைத் தொடர்ந்து காண்பித்துக் கொண்டிருக்கின்றார். அந்த ஆச்சரியமான சத்தியமானது மரணத்தை எதிர்கொண்டிருந்த கிறிஸ்தவர் களுக்குக் கோட்டையாக இருந்து பாதுகாப்பை அளித்தது (ரோமர் 8:36, 37).*

*அவர் "தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி"னார் (விடுதலையாக்கினார்).[31] முந்திய சொற்றொடர் தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிப்பிடும் வகையில் நிகழ்காலத்தைப் பயன்படுத்தி எழுதப்பட்டது. இந்தச் சொற்றொடர், கடந்த காலத்தில் ஒருமுறை மாத்திரம் செய்யப்பட்ட செயலைக் குறிக்கும் வகையில் ஒருமுறை மாத்திரம் நிகழ்ந்த வினைச் சொல்வகையைக் கொண்டுள்ளது.[32] அந்த ஒருமுறை நடந்த செயல் என்பது சிலுவையில் இயேசுவின் மரணமாக இருந்தது! அவர் நமக்காக இரத்தம் சிந்திய காரணத்தினால், நமது ஆத்துமாக்களில் இருந்து குற்றத்தின் பாரச்சுமை நீக்கப்பட்டது (ரோமர் 5:9; எபேசியர் 1:7; கொலோசெயர் 1:20; 1 பேதுரு 1:18, 19; 1 யோவான் 1:7).*

*அவர் நம்மை விடுதலையாக்கினார்!*

*"தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும்*[33] *ஆசாரியர்களுமாக்கின* [in English here it is "to be"[34]] *அவருக்கு."* நாம் மீண்டுமாக யாத்திராகமத்தின் மொழிநடைக்கு வருகின்றோம். தேவன் இஸ்ரவேல் மக்களுக்குப் பின்வரும் வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்: "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக் கையைக் கைக்கொள்வீர்களானால், ... நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள் ..." (யாத்திராகமம் 19:5, 6). அந்த வாக்குத்தத்தம், பதினைந்து நூற்றாண்டுகளுக்குப் பின்பு சபை என்ற ஆவிக்குரிய இஸ்ரவேலில் நிறைவேற்றத்தைக் கண்டறிந்தது (கலா. 3:29; ரோமர் 2:28, 29; 1 பேதுரு 2:9). எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாக இருக்கின்றோம்; நாம் தேவனுக்கு, ஆவிக்குரிய பலிகளை ஏறெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் (1 பேதுரு 2:5; எபிரேயர் 13:15; ரோமர் 12:1). நாம் ஆசாரியர்களைக் காட்டிலும் மேலானவர்களாக இருக்கின்றோம்; இருப்பினும் நாம் *இராஜரீகமான* ஆசாரியர்களாய் இருக்கின்றோம். நாம் ஒரு இராஜ குடும்பத்தின் அங்கமாய் இருக்கின்றோம்!

இயேசுவின் பண்பினங்களைப் பின்னோக்கித் திரும்பிக் கண்ணோக் குங்கள், பரலோகத்தில் அல்லது பூலோகத்தில் அவர் கட்டுப்பாடு செய்ய இயலாத எதுவும் இருப்பதில்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். நாம் யோவானுடன் சேர்ந்து "அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக் கும் உண்டாயிருப்பதாக. ஆமென்" என்று வியப்புற்றுக்கூற வேண்டும் (வசனம் 6ஆ; தானியேல் 7:13, 14ஐக் காணவும்)!

## "எதுவரைக்கும் நீர் எங்கள் விரோதிகளைத் தண்டியாது இருப்பீர்?" *(1:7)*

இயேசுவை உண்மையுள்ளவர், உயிர்த்தெழுந்தவர், ஆளுகின்றவர், அன்புகூருகின்றவர் மற்றும் மகிமை பொருந்தியவர் என்று யோவான் சித்தரித்திருந்தார். அடுத்ததாக அவர், இயேசுவை வருகின்றவராக அறிவித்தார்: "இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும்,[35] அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்,[36] பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென்" (வசனம் 7).

J. W. இராபர்ட்ஸ் அவர்கள், "(இந்த) வாக்குத்தத்தம் இரண்டாம் வருகைக்கு அடிப்படைக் குறிப்பை கொண்டுள்ளது என்பது மறுக்க இயலாததாக உள்ளது" என்று கூறினார்.[37] பின்பு அவர், இந்த சந்தர்ப்பப் பொருளில் இவ்வாக்குத்தத்தமானது அத்துடன் வரையறைப்படுத்தப்பட முடியாது என்றும் கூடுதலாகக் கூறினார். மேகங்களில் தேவனுடைய வருகை என்ற அடையாளத்துவமானது துன்மார்க்கமான தேசங்களைத் தண்டிப்பதற் கானதாக வேதவசனங்கள் முழுவதிலும், காணப்படுகிறது (ஏசாயா 19:1 மற்றும் எசேக்கியல் 30:3, 4 ஆகியவற்றைக் காணவும்). ரோமர்களின் பாதங்களின் கீழ் நசுக்கப் பட்டுக்கொண்டிருந்த

*கிறிஸ்தவர்கள், தங்களை ஒடுக்குபவர் களுக்குக் கர்த்தர் உடனடியாக ஏதோ செய்யப்போகின்றார் என்பதை அறிதல் அவசியமாய் இருந்தது. இயேசு, "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்" என்ற வார்த்தைகளைக் கொண்டு அவர்களுக்கு அதை நிச்சயப்படுத்தினார் (2:5, 16; 3:11; 22:7, 12, 20 ஆகிய வசனங்களைக் காணவும்).*

*ரோமப்பேரரசின்மீது அவர் நியாயந்தீர்ப்பதில் வரும்போது, மகிழ்ச்சியற்ற தன்மை எங்கும் பரவும். வசனம் 7, "பூமியின் கோத்திரத்தாரெல்லாரும்[38] அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்" என்று கூறுகிறது; "இது மனந்திரும்புதலின் புலம்பலாயிராமல், நம்பிக்கையின்மையின் புலம்புதலாய் இருக்கிறது."[39] எகிப்தியர்கள் தங்களின் முதற்பேறான யாவரும் மரித்தபோது புலம்பியது போல்(யாத்திராகமம் 11:6), கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்கள் புலம்புவார்கள், தேவனுடைய மக்கள் மீது வேதனையளித்துப் புண்படுத்தியவர்கள், தாங்கள் விதைத்ததை - இரண்டு மற்றும் மூன்று மடங்காக - அறுவடை செய்வார்கள்!*

*(இராபர்ட்ஸ் அவர்கள் கூறுகின்றபடி) வசனம் 7ல் உள்ள வாக்குத்தத்தம் "இரண்டாம் வருகைக்கு அடிப்படைக் குறிப்பைக் கொண்டுள்ளது" என்பது வலியுறுத்தப்பட வேண்டும். வேதவசனங்கள் சுட்டிக்காண்பிக்கிற தற்காலிகமான "நியாயத்தீர்ப்பு - வருகைகள்" என்பது கடைசியில் எல்லா மனிதர்களும் தேவனுடைய அரியணைக்கு முன், நின்று நியாயத்தீர்க்கப்படுதல் என்ற உச்சக்காட்சியான இரண்டாம் வருகையை முன்னெதிர் நோக்குகின்றது - எல்லாத் தவறுகளும் அப்போது நேராக்கப்படும் இறுதி நிலை நிகழ்ச்சியாக அது உள்ளது.[40] கிறிஸ்து திரும்ப வருவார் என்ற எண்ணத்தைப்போன்று, ஆதிகிறிஸ்தவர்களுக்கு வேறு எதுவும் அதிகமான ஆறுதலைக் கொண்டுவரவில்லை! அவர் திரும்ப வருவதற்கு நீங்களும் தயாராக இருந்தால் உங்கள் ஆத்துமாவுக்கும் அது ஆறுதலைக் கொண்டு வரும்!*

*இயேசு வருகின்றார் என்று யோவான் அறிவித்தபோது, "அப்படியே ஆகும், ஆமென்" என்று(ம்) கூறினார். நேரடி அர்த்தத்தில் அவர், "ஆமென், ஆமென்!"[41] என்று கூறினார். எல்லா சபைக்குழுமங்களும் "ஆமென்!" என்று கூறட்டும்.[42]*

## "எதுவரைக்கும் நீர் உமது சொந்த உத்தரவாதத்தைக் கொடுக்காது இருப்பீர்?" *(1:8)*

*வசனம் 8ல் யோவானின் உரையைக் கர்த்தர் இடைமறித்தார்: "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர்: நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்." "அல்பா" மற்றும் "ஒமெகா" ஆகியவை கிரேக்க அகரவரிசையில் முதல் மற்றும் கடைசி எழுத்துக்களாய் உள்ளன.* இதை ஆங்கிலத்தில் "நானே A to Z ஆக இருக்கின்றேன்" என்றும், தமிழில் "நானே 'அ'கரமும் 'ன'கரமும் ஆக இருக்கின்றேன்" என்றும் கூறலாம். தேவன் துவக்கமும் முடிவுமாக, ஆதியும் அந்தமுமாக இருக்கின்றார்.

*“இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய” என்ற சொற்றொடர், வசனம் 4ல் நித்தியமான தேவனை விவரிக்கப் பயன்படுத்தப்பட்ட அதே சொற்றொடராக உள்ளது. “சர்வவல்லமையுள்ள” என்பது தேவனுடைய வல்லமையை எடுத்துரைத்து, சீஸர் (இராயன்) அல்ல ஆனால் தேவனே ‘‘எல்லாருக்கும் இராஜரீகமான கர்த்தராக’’ இருக்கின்றார் என்று அறிவிக்கிறது.*

*இவ்விடத்தில் பேசுகிறவர் பிதாவாகிய தேவனா அல்லது குமாரனாகிய தேவனா, என்பதில் விளக்கவுரையாளர்கள் பிரிவுபட்டு நிற்கின்றனர். முன்னதாகப் பிதாவானவர், “இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமான வராலும்’’ என்று பேசப்பட்ட உண்மையானது, இவ்விடத்திலும் பிதாவானவர் பேசினார் என்ற கண்ணோட்டத்தை ஆதரிக்கிறது. பிற்பாடு இயேசு, “நான் அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்” (22:13; 1:17ஐயும் காணவும்) என்று அறிவிக்கப் பட்டுள்ள உண்மையானது, இவ்விடத்தில் குமாரன் பேசினார் என்ற கண்ணோட்டத்தை ஆதரிக்கிறது.[43] விஷயம் குறைவான தனிச்சிறப் புடையதாக உள்ளது.[44] எவ்வகையிலும் வசனம் 8, கர்த்தரின் அதிகாரத்துவத் தினுடைய சொந்த முத்திரையை நோக்கங் கொண்டுள்ளது: “ஏற்படுத்தப் பட்டுள்ள வாக்குத்தத்தங்களின்மீது நீங்கள் உங்கள் வாழ்க்கையை உத்தரவாதப்படுத்த முடியும், ஏனெனில் நானே பேசியுள்ளேன்!”*

*கர்த்தரிடமிருந்து வந்த அவ்வகையான தனிப்பட்ட உத்தரவாதம், முன் எப்போதும் இருந்திராததாக இருந்தது, ஆனால் கிறிஸ்தவர்கள் பட்ட உபத்திரவமும் அதேபோன்றுதான் இருந்தது. யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள், ‘‘நான் தனிப்பட்ட வகையில் பொறுப்பேற் கின்றேன்’’ என்று தேவன் அறிவிப்பதைக் கேட்க அவசியமான நிலையில் இருந்தனர். நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையில் போராடிக் கொண்டிருக் கையில், உங்களுக்கும் அதே உத்தரவாதம் அவசியமாய் இருக்கலாம்!*

## முடிவுரை

*அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரவேல் மக்களைத் தேவன் விடுவித்த நிகழ்ச்சிக்கும், துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களை அவர் விடுவித்த நிகழ்ச்சிக்கும் இடையில் பல இணைவுகளை நாம் உற்றுக் கவனித்தோம். மற்ற இணைவுகளும் பட்டியல் இடப்படக் கூடும்.[45] தேவன் பார்வோ னிடத்தில் மோசேயையும் ஆரோனையும் அனுப்பியது போலவே, “தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல் லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும்” அதிகாரம் கொண்ட “இரண்டு சாட்சிக”ளைப் பற்றி நாம் வாசிக்க இருக்கின்றோம் (11:3, 6). வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்களைத் தேவன் போஷித்தது போலவே (யாத்திராகமம் 3:18), சபைக்கென்று “தேவனாலே ஆயத்தம்பண்ணப் பட்டிருந்த இடம் ஒன்றைப்”ப் பற்றி நாம் வாசிக்க இருக்கின்றோம். இந்த இடத்தை “வனாந்தரம்” என்று வெளிப்படுத்தின விசேஷம் அழைக்கிறது; அங்கு தேவனுடைய மக்களுக்கு உணவளித்து (12:6) அவர்கள் போஷிக்கப்*

படுவார்கள் (12:14). இஸ்ரவேல் மக்கள், "பாலும் தேனும் ஓடுகிற" நாட்டை நோக்கிப் (யாத்திராகமம் 3:17) பயணம் சென்றது போலவே, நாம் "ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி"யும் "ஜீவவிருட்ச"மும் உள்ள நகரத்தை நோக்கிப் பயணம் சென்று கொண்டிருக்கின்றோம் (22:1, 2) - அந்த இடத்தில் தேவன், "கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார், இனி மரணமுமில்லை" (21:4)!

இருப்பினும் இப்போதைக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தின் முதல் எட்டு வசனங்கள் - இவற்றில் கண்டறியப்படுகிற சத்தியங்களை நாம் *விசுவாசித்தால்* - நமக்குக் கொண்டுவரக்கூடிய *ஆறுதலை* வலியுறுத்தவே நான் விரும்புகின்றேன். சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறையும் கோட்பாட்டைப் பற்றி இரண்டு சிறு பையன்கள் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு பையன், "சூரியன் உண்மையில் நகர்வதே இல்லை என்று என் தந்தை கூறுகின்றார். பூமிதான் நகருகிறது, அப்போது சூரியன் *நகருவதாகத் தோன்றுகிறது*" என்று சொன்னான். மற்ற பையன் அதைப் பற்றிச் சற்றுச் சிந்தித்துவிட்டு, "நான் என் கண்களையே நம்புகின்றேன்" என்று அறிவித்தான். முதல் பையன் அமைதியாக ஆனால் உறுதியாக, "நான் என் தந்தையை நம்புகின்றேன்" என்று பதில் அளித்தான். நீங்களும் நானும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருந்து, நமது கண்களின் சாட்சியத்தை ஏற்றுக்கொண்டிருந்தால், கிறிஸ்தவமானது அழிவுக்குட்பட்டது என்று நாம் முடிவு செய்திருப்போம். பல கிறிஸ்தவர்கள் தங்கள் கண்களை நம்புவதற்குப் பதிலாகத் தங்களின் பிதாவை நம்பியிருந்தனர் என்பதற்காகத் தேவனுக்கு நன்றி. அவர்களின் பிதாவானவர், அவர்கள் விசுவாசத்தில் நிலைத்திருந்தால் வெற்றிபெறுவார்கள் என்று கூறியிருந்தார். அவர்கள் அந்த வாக்குத்தத்தத்தைப் பற்றிக்கொண்டிருந்தனர், அவர்கள் வெற்றியாளர்களாய் இருந்தனர். நாம் தேவனை விசுவாசித்து அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்கத் தேவன் நமக்கு உதவுவாராக![46]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தப் பாடமானது நமது படிப்பின் இருதயம் போன்ற மையப் பகுதியின் தொடக்கமாக உள்ளது: இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை முற்றிலுமாக எடுத்துரைத்து முடிக்கும் விளக்கவுரைப் பிரசங்கங்களின் வரிசைத் தொடராக உள்ளது.

1:1-8ன் மீதான இந்த முதல் பாடத்தின் தொடர்பாக நீங்கள், இஸ்ரவேல் மக்களின் கூப்பிடுதலுக்கு தேவனுடைய பதில்செயலை, முதல் நூற்றாண்டில் துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அவரின் பதில் செயலுடன் ஒப்பிடுகிற அட்டவணையொன்றை மேம்படுத்த விரும்பலாம். இந்த அட்டவணை பின்வருமாறு தொடங்க முடியும்:

| இஸ்ரவேல் மக்கள் | முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் |
|---|---|
| எகிப்தில் அடிமைகள் | ரோமர்களால் துன்புறுத்தப்பட்டனர் |
| தேவனிடத்தில் கூக்குரலிட்டனர் | தேவனிடத்தில் கூக்குரலிட்டனர் |
| தேவன் கேட்டார் | தேவன் கேட்டார் |
| தேவன் மோசேயிடம் பேசினார் | தேவன் யோவானிடம் பேசினார் |
| பாலைவனம் | பத்மு |
| ஒரு தூதன் | ஒரு தூதன் |
| எரியும் முட்புதர் | மகிமைப்பட்ட கர்த்தர் |
| தேவன் விடுதலையை வாக்குத்தத்தம் செய்தார் | தேவன் விடுதலையை வாக்குத்தத்தம் செய்தார் |

நீங்கள் இந்த ஒப்பீட்டை விரும்பும் அளவுக்குத் தொடர முடியும். நாம் துன்புறுத்தப்படும்போது தேவன் *இன்னமும்* நமது வேண்டுதல்களைக் கேட்டுப் பதில்செயல் செய்கின்றார் என்பதைக் காண்பதற்கு, இத்துடன் நீங்கள் மூன்றாவது பத்தியாக "இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள்" என்பதையும் கூட்ட முடியும்.

வசனங்கள் 1 முதல் 8 வரையுள்ள இந்தப் பகுதிக்கு நீங்கள் அதிகம் பாரம்பரியமான அணுகுமுறையை அதிகம் விரும்பினால், இங்கு ஒரு மூன்று கருத்துள்ள வரைக்குறிப்புள்ளது: (1) மேல் எழுத்தால் குறிப்பிடுதல் (வசனங்கள் 1-3); (2) வணக்கம் தெரிவித்தல் (வசனங்கள் 4-7); (3) முத்திரை (வசனம் 8). நீங்கள் பீட்டர்ஸன் அவர்களின் தலைப்பை விரும்பலாம்: "வேதவசனத்தின் கடைசி வார்த்தை."[47] வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, மூடிய கடிதம் வாயிலாகப் பெறப்பட்ட ஒரு கையெழுத்துப் பிரதியாக இருந்தது என்றும் நீங்கள் கருத்துத் தெரிவிக்கலாம். அந்தப் பொதிகொண்ட உறையின்மீது பொருளடக்கங்கள் "முத்திரையிடப் பட்டுள்ளது" (வசனங்கள் 1-3). நீங்கள் அந்த உறையைத் திறந்து, அறிமுகக் கடிதத்தை வாசிக்கின்றீர்கள் (வசனங்கள் 4-7), இது அந்தக் கையெழுத்துப் பிரதியில் அடங்கியுள்ள ஆசீர்வாதங்களைப் பற்றிக் கூறுகிறது. அறிமுகக் கடிதத்தின்கீழ், முக்கியஸ்தரின் முத்திரை உள்ளது,[48] இது அந்தக் கடிதம் உண்மையானது என்பதை உத்தரவாதப் படுத்துகிறது (வசனம் 8).

1:1-8ல் உள்ள சிறு பகுதிகள், பிரசங்கங்களுக்குத் தொடக்க இடத்தை அளிக்கக்கூடும். எடுத்துக்காட்டாக, வசனம் 3, வேதாகமத்தைப் படித்தல் மற்றும் அதற்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தின் மீதான ஒரு பாடத்திற்கு அடிப்படையாக இருக்க முடியும்.

*The Gates of New Life* (புதிய வாழ்வின் வாசல்கள்) என்ற புத்தகத்தில் ஜேம்ஸ் ஸ்டீவர்ட், "கிறிஸ்து எனக்கு அர்த்தப்படுத்துவது என்ன" என்ற தலைப்பின்மீது வெளி. 1:5, 6ல் இருந்த வசனரீதியான பிரசங்கம் ஒன்றை உள்ளடக்கினார். அவரது கருத்துக்கள் பின்வருமாறு: (1) அவர் "நம்மீது அன்புகூருகின்றார்"; (2) அவர் "தமது இரத்தத்தினால் நமது பாவங்களற நம்மைக் கழுவினார்"; (3) "அவர் நம்மை இராஜாக்களாகவும் ஆசாரியர் களாகவும் ஆக்கினார்"; (4) "அவருக்கே என்றென்றைக்கும் மகிமையும் இராஜ்யமும் உரித்தாவதாக."

வசனங்கள் 5 முதல் 8 வரையுள்ள பகுதியில் இயேசுவைப் பற்றித் தரப்பட்டுள்ள விவரிப்பானது, இயேசுவின்மீது ஒரு அர்த்தம் நிறைந்த பாடமாகப் பயன்படுத்தப்பட முடியும். வசனம் 7க்கான விளக்கங்களில் நான், "உண்மையுள்ளவர்" என்பதில் தொடங்கி ஆறு சொற்றொடர்களை உள்ளடக்கினேன், இவைகள் இதற்குப் பயன்படுத்தப்பட முடியும். ஜேய் லாக்ஹார்ட் அவர்கள், *Truth for Today* யின் மார்ச்சு 1988 வெளியீட்டில், "இயேசு யார்?" என்ற பாடத்தில் அதிகாரம் 1ன் முதல் பகுதியைப் பயன்படுத்தினார்.

1:3ல் உள்ள பாக்கியத்தில் ["beatitude"] தொடங்கி, "வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு பாக்கியங்கள்" என்பது பற்றிப் பல பிரசங்கங்கள் பிரசங்கிக்கப் பட்டுள்ளன. மற்ற பாக்கியங்கள் 14:13; 16:15; 19:9; 20:6; 22:7, 14 ஆகிய வசனங்களில் காணப்படுகின்றன. "Beatitude" என்ற வார்த்தையானது "மகிழ்ச்சி" என்பதற்கான இலத்தீன வார்த்தையில் இருந்து வருகிறது. இது "பாக்கியவான்கள்" என்று தொடங்குகிற (மத்தேயு 5:3-11 போன்ற) வசனப்பகுதிகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப் படுகிறது. "மகிழ்ச்சி" என்று அர்த்தப்படுகிற *makarios* என்ற கிரேக்க வார்த்தையே "blessed" ["பாக்கியவான்கள்"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் "இவ்வார்த்தை 'மகிழ்ச்சி' என்பதைக் காட்டிலும் அதிகமானதை அர்த்தப்படுத்துகிறது. இது தேவன் ஒரு நபருக்குள் வைக்கின்ற சாதகமான சூழ்நிலையை விவரிக்கிறது."[49]

---

குறிப்புகள்

[1]அந்த விளக்கங்களில் சில, இந்தப் பாடத்தில் தேவைப்படுவதாலும், நாம் திரும்பக்கூறுதலின் மூலம் கற்கின்றோம் என்பதாலும் திரும்ப இங்கு கூறப்படும். [2]Robert Mounce, notes on the Book of Revelation, *The NIV Study Bible*, gen. ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1926. [3]புறதெய்வ (பாபிலோனிய, கிரேக்க, ரோம, மற்றும் யூதத்துவ மாயாவாத) இலக்கியத்தின் ஆதாரமூலங்களில் இருந்து கருத்துக்களை யோவான் கடனாகப் பெற்றார் என்று சில எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர், ஆனால் இந்தப் புத்தகம் தேவனிடத்தில் இருந்து வந்தது என்பதை யோவான் வலியுறுத்தினார். [4]"ஊழியக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "அடிமைகள்" என்று அர்த்தம் தருவதாக உள்ளது. நாம் நம்முடையவர்கள் அல்ல, நாம் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டோம் என்று வசனம் சுட்டிக்காண்பிக்கிறது (1 கொரிந்தியர் 6:19, 20). [5]அதிகாரம் 22ன் வசனம் 6லும் "சீக்கிரமாய்ச் சம்பவிக்கவேண்டியவைகளை" என்றுள்ளது. [6]இந்தச் சொற்றொடரை, "what must happen soon" என்று CEV வேதாகமம் மொழிபெயர்க்கிறது (*The Holy Bible: Contemporary English Version* [Nashville: Thomas Nelson Publishers, 1995]), மற்றும் பீட்டர்ஸன் அவர்கள், "what is about to happen" என்று எழுதியுள்ளார் (Eugene H. Peterson, *The Message: New Testament With Psalms and Proverbs* [Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995], 609). [7]22:8யும் காணவும். யோவான் தமது வாழ்வு முழுவதிலும், தேவனுடைய வசனத்தைக் குறித்து ஒரு உண்மையுள்ள சாட்சியாக

*இருந்தார். இருப்பினும், வசனம் 2ல் "தேவனுடைய வசனம்" என்பதும் "இயேசு கிறிஸ்துவினுடைய சாட்சி" என்பதும், பத்மு தீவில் அவர் "கண்ட மற்றும் கேட்ட யாவற்றையும்" குறிக்கிறது.* [8]*"அவர்" என்பது ஒருமையிலும் "அவர்களுடைய" என்பது பன்மையிலும் உள்ளது. ஒரு மனிதர் வாசித்தார், ஆனால் பலர் கேட்டனர்.* CEV வேதாகமத்தில் "everyone who reads this prophecy to others" *என்றுள்ளது.* [9]*வசனத்தைப் பொதுவில் வாசித்தல் என்பது ஜெப ஆலய ஆராதனையின் ஒரு பகுதியாக இருந்தது (லூக்கா 4:16; நடபடிகள் 13:15) மற்றும் இது கிறிஸ்தவ ஆராதனையின் முக்கியமானதொரு பகுதியாயிற்று.* [10]*1:3ல் குறிப்பிடப்பட்ட கேட்குதல் என்பது ஒலிகள் அல்லது வார்த்தைகளை வெறுமனே கேட்டல் என்பதை அர்த்தப்படுத்துவதில்லை. மாறாக, இது வசனத்தை ஆர்வத்துடன், கீழ்ப்படியத் தயாரான நிலையில் கேட்டல் என்பதை உள்ளடக்குகிறது (நடபடிகள் 10:33ஐக் காண்க). வசனத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பது வசனத்தை முன்வைத்தலைப் போன்றே முக்கியமானதாக உள்ளது (மத்தேயு 13 மற்றும் லூக்கா 8ல் உள்ள விதைப்பவன் உவமையைக் காணவும்).*

[11]*"கைக்கொள்ளுதல்" (*KJV *யில்* "keep" *என்றுள்ளது) என்பது, "கவனித்தல், காவல் செய்து பாதுகாத்தல்" என்று அர்த்தப்படக்கூடிய ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து வருகிறது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை நாம் கொண்டுள்ளோம் (22:18, 19). இருப்பினும் இவ்விடத்தில் உள்ள சந்தர்ப்பப் பொருளில், இவ்வார்த்தையானது "உற்றுக்கவனித்தல் அல்லது கீழ்ப்படிதல்" என்ற அர்த்தம் கொண்டுள்ளதாகவே காணப்படுகிறது.* [12]*நம்மில் பலர், தீர்க்கதரிசனம் என்பதை "எதிர்காலம் பற்றிய முன்னுரைத்தல்" என்பதாகவே தாமாக நினைக்கின்றோம். இருப்பினும், "[இந்த] தீர்க்கதரிசன வார்த்தைகள்" கீழ்ப்படியப்பட வேண்டியவைகளாய் இருந்தன என்பதைக் கவனியுங்கள். ஒரு முன்னுரைத்தலுக்கு நீங்கள் கீழ்ப்படிவதில்லை; மாறாக கட்டளைகளுக்கே நீங்கள் கீழ்ப்படிகின்றீர்கள். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் எதிர்காலம் பற்றிய முன்னுரைத்தல் இருப்பினும், "தீர்க்கதரிசனம்" என்ற சொற்றொடரானது "கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகள் அடங்கிய ஏவுதல் பெற்ற செய்தி" என்பதையே அடிப்படையில் குறிப்பிடுவதாக உள்ளது (22:7ஐயும் 22:12ஐயும் ஒப்பிடவும்).* [13]*இந்தப் புத்தகத்தின் முதலில் மற்றும் முடிவில் பெரும்பாலான வெளிப்படையான கட்டளைகள் உள்ளன (2:5, 16, 25; 3:2, 3, 11, 18, 19; 11:11), ஆனால் 2:10ன் கட்டளைகள் ("நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே"; "நீ மரணபரியந்தம் உண்மையாயிரு") இந்தப் புத்தகம் முழுவதிலும் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது.* [14]*"காலம் சமீபித்திருக்கிறது" என்ற உறுதிப்பாடு 22:10லும் காணப்படுகிறது.* [15]Harold Hazelip, *The Lord Reigns: A Survey of the Book of Revelation* (Abilene, Tex.: Herald of Truth, n.d), 4. [16]*இந்தப் புத்தகத்தில் உள்ள கி.பி. 100ம் ஆண்டளவில் ரோமப்பேரரசு என்ற வரைபடத்தைக் காணவும்.* [17]Edward A. McDowell, *The Meaning and Message of the Book of Revelation* (Nashville: Broadman Press, 1951), 5. [18]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 85. [19]*இது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் வழக்கமான வாழ்த்துதலாக இருந்தது. பவுல் மற்றும் பேதுரு ஆகியோரின் நிருபங்களின் தொடக்கத்தைக் காணவும். 2 யோவான் 3ஐயும் காணவும்.* [20]*இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பாடத்தில், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் இலக்கணமானது சில இடங்களில் பழமையானதாக இருந்தது என்று நான் குறிப்பிட்டேன். இது அந்த இடங்களில் ஒன்றாக உள்ளது. மூலவேதவசனப் பகுதியில்,* "The Being (One), the Was (One), and the Coming (One)" *என்று நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. முன்பே குறிப்பிட்டபடி, இலக்கணமானது பழமையானதாக இருக்கலாம், ஆனால் அது*

*செயல்விளைவுள்ளதாக இருக்கிறது.*

*[21]"சிங்காசனத்துக்கு முன்பு" என்ற சொற்றொடர் "அவரது சித்தத்தைச் செய்யத் தயாராயிருத்தல்" என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. [22]இந்தச் சொற்றொடர் சிலவேளைகளில் இயேசுவுக்குப் பயன்படுத்தப் படுகிறது; ஆனால் வசனம் 5ல் இயேசு பட்டியலிடப்பட்டிருப்பதால், இங்கு இந்தச் சொற்றொடர் பிதாவுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும். [23]இந்தச் சொற்றொடர் தேவனுடைய ஆணைகளை நிறைவேற்றக் காத்திருக்கும் ஆவிக்குரிய ஏழு ஜீவிகளை (ஒருவேளை தூதர்களை) மட்டும் குறிக்கலாம் என்று சிலர் நம்புகின்றனர். இது சாத்தியமானதாகவே உள்ளது, ஆனால் உடனடி சந்தர்ப்பப் பொருளானது - அத்துடன் இந்தப் புத்தகத்தின் சந்தர்ப்பப் பொருளும் இணைந்து - இது பரிசுத்த ஆவியானவராக இருக்கின்றார் என்ற முடிவை ஆதரிக்கிறது: (1) தாழ்நிலையில் உள்ள ஆவிகள் சாதாரணமாகப் பிதாவுடனும் குமாரனுடனும் வகைப்படுத்தப் படுவதில்லை. (2) "ஏழு ஆவிகள்" (இது 3:1; 4:5; மற்றும் 5:6லும் காணப்படுகிறது) என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுவதில்லை என்றால், வெளிப்படுத்தின விசேஷத்தில் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கொஞ்சமே சொல்லப்பட்டுள்ளது அல்லது ஒன்றும் சொல்லப்படவில்லை என்றாகிறது. [24]சிலர், ஏசாயா 11:2ல் ஆவியானவருடையதாகக் கூறப்பட்டுள்ள ஏழு மடங்கு பண்புகள் அல்லது சகரியா 4:6, 10ல் உள்ள தேவனுடைய ஏழு கண்கள் என்பதற்கான குறிப்பை இதில் காணுகின்றனர்.* [25]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse),* The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 29. *[26]வசனத்தைக் குறித்துச் சாட்சியளிப்பதில் உண்மையுள்ளவர்களாய் இருந்த மோசே மற்றும் கிறிஸ்து ஆகியோருக்கிடையில் ஒரு இணைவைத் தரவழைக்க முடியும். [27]கிறிஸ்தவர்களை ''மரணபரியந்தம் உண்மையாய் இருக்கும்படி'' இயேசு அழைத்தபோது (2:10), அவர் தாம் செய்ய மனவிருப்பமற்றிருந்த எதையும் அவர்கள் செய்யும்படி கேட்டுக்கொள்ளவில்லை. [28]"முதற் பிறந்தவர்" என்ற சொற்றொடர், முதற்பேறான குமாரனின் தலைமை சிலாக்கியம் பற்றிய பழைய ஏற்பாட்டு போதனையில் இருந்து வருகிறது (எடுத்துக்காட்டாக, உபாகமம் 21:15-17ஐக் காணவும்). கொலோசெயர் 1:18ல், ''முதற்பேறானவர்'' என்ற சொற்றொடர் ''தலைமை சிலாக்கியம்'' என்ற சொற்றொடருடன் இணைக்கப்பட்டுள்ளது. ''முதற்பேறானவர்'' என்ற சொற்றொடர், யொகோவா சாட்சிகள் உரிமைகோருவதுபோல், இயேசு படைக்கப் பட்டவர் என்று கருத்தைத் தெரிவிப்பதில்லை. [29]இயேசு இப்போது ஆட்சிசெய்வதில்லை என்று சிலர் உரிமைகோருகின்றனர், ஆனால் அவர் இப்போது ஆட்சி செய்கின்றார் என்றே வேதாகமம் கூறுகிறது (1கொரிந்தியர் 15:24-28). அவர்கள், "கிறிஸ்து இப்போது ஆட்சிசெய்கின்றார் என்றால், உலகம் ஏன் இவ்வளவு பயங்கரமான நிலையில் இருக்கிறது?" என்று மறுப்புரைக்கின்றனர். உலகத்தின் நிலைமையானது இயேசு இப்போது ஆட்சிசெய்வதில்லை என்று நிரூபிக்கிறதென்றால், அது தேவத்துவத்தில் உள்ள எவருமே - பிதாவும்கூட - இப்போது ஆட்சிசெய்வதில்லை என்றும் நிரூபிப்பதாக இருக்குமே! இந்தக் கேள்விபற்றிய ஒரு கலந்துரையாடல்* Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976) *என்ற புத்தகத்தின் 35-37ம் பக்கங்களில் உள்ளது. [30]கிரேக்க மொழியில், வினைச் சொற்கள் காலத்தைக் காட்டிலும் செயலின்மீது அதிகம் செயல்படுபவையாக இருந்துள்ளன.*

*[31]பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில்* "released" *(விடுவித்தல்) என்பதற்குப் பதில், (தமிழ் வேதாகமத்தில் உள்ளதுபோலவே)* "washed" *என்றுள்ளது. ''விடுவித்தல்'' என்பதற்கான கிரேக்க வார்த்தை (louo) என்பது ''கழுவுதல்''*

*என்பதற்கான கிரேக்க வார்த்தையைப் (luo) போன்றதாகவே உள்ளது. 7ம் அதிகாரம் 14ம் வசனத்தில் "wash" என்பதற்கான கிரேக்க வார்த்தையே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது.* [32]*கிரேக்க மொழியில் ஒருமுறை மாத்திரம் வரும் வினைச் சொல் என்பது ஆங்கிலத்தில் மற்றும் தமிழில் கடந்த கால வினைச் சொல்லைப் போன்றதாகவே உள்ளது, ஆனால் மீண்டும் இவ்விடத்தில் செயலின்மீது வலியுறுத்தம் உள்ளது (குறிப்பு எண் 30ஐக் காணவும்).* [33]*பழைய கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில் "இராஜ்யம்" என்பதற்குப் பதில் "அரசர்கள்" (இராஜாக்கள்) என்ற வார்த்தை உள்ளது. அர்த்தமானது அடிப்படையில் ஒரேமாதிரியாகவே உள்ளது.* [34]*சிலர், "to be" என்ற வார்த்தைகளை, இயேசு நம்மை எதிர்காலத்தில் அரசர்களாக்குவார் என்று விளக்கப் படுத்தியுள்ளார். இருப்பினும் "to be" என்ற வார்த்தைகள் NASB வேதாகமத்தில் சாய்வெழுத்துக்களில் உள்ளன, இது மொழிபெயர்ப்பாளர்களால் கூட்டப்பட்டது என்பதைக் குறிக்கிறது. மூல வசனத்தில் "அவர் நம்மை ஒரு இராஜ்யமாக்கினார்" என்றுதான் உள்ளது. இராஜ்யம் என்பது எதிர்காலத்தில் ஏற்படப் போவதாக இருப்பதில்லை; இராஜ்யம் ஏற்கனவே நிலைநாட்டப் பட்டுள்ளது (கொலோசெயர் 1:13ஐக் காணவும்).* [35]*இது, 1914ம் ஆண்டில் இயேசு அமைதியாக, காணப்படாத வகையில் திரும்ப வந்தார் என்ற யெகோவா சாட்சிகளின் உரிமை கோருதலை ஓயச்செய்கிறது.* [36]*யோவான் 19:32-37ஐக் காணவும்.* [37]Roberts, 31. *"கண்கள் யாவும்"; "பூமியின் கோத்திரத்தார் யாவரும்" என்ற இந்த வாக்குத்தத்தத்தின் புரிந்துகொள்ளக்கூடிய தன்மையின் காரணமாக, இராபர்ட்ஸ் இதைக் கூறினார்.* [38]*வெளிப்படுத்தின விசேஷத்தில் பூமியின் குடிகள் என்பவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களாக இருக்கின்றனர்.* [39]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 68. [40]*தற்காலிகமான நியாயத்தீர்ப்பிற்கான வருகைகள் அல்லாமல் இரண்டாம் வருகை என்று எதுவும் இல்லை என்பதாகச் சிலர் உரிமை கோருகின்றனர், ஆனால் இது இரண்டாம் வருகை பற்றிய புதிய ஏற்பாட்டின் போதனைக்கு நேர்மாறானதாக உள்ளது. உதாரணமாக, அவர் மறுபடியும் வரும்வரைக்கும் நாம் கர்த்தருடைய இராவிருந்தில் பங்கேற்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:26). இரண்டாம் வருகை என்பது ஏற்கனவே நடைபெற்று விட்டது என்றால், நாம் இனியும் கர்த்தருடைய இராவிருந்தில் பங்கேற்கக் கூடாது. நாம் கர்த்தருடைய இராவிருந்தில் பங்கேற்கக் கூடாது என்று போதிக்க யாரேனும் துணிவார்களா?*

[41]*யோவான், உறுதிப்பாட்டின் கிரேக்க வடிவத்தை முதலிலும் பின்பு அதன் எபிரெய வடிவத்தையும் பயன்படுத்தினார்.* [42]*நெகேமியா 5:13ல் இருந்து தழுவப்பட்டது.* [43]*மேலும், வசனம் 8க்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்கள் இயேசுவைப் பற்றிப் பேசுகின்றன என்ற உண்மையானது, வசனம் 8ல் இயேசுவே பேசினார் என்ற கண்ணோட்டத்தை ஆதரிக்கிறது.* [44]*இருவருமே தேவத்துவத்தின் பகுதியாக உள்ளனர் (கொலோசெயர் 2:9ஐக் காணவும்). ஒருவர் செய்கின்றதை இன்னொருவரும் செய்யமுடியும் என்று கூறப்படுகிறது.* [45]*இந்தப் புத்தகத்தில் "மோசேயும் யாத்திரையும்" என்ற பகுதியில் காணவும். மற்றவைகளும் கூடுதலாகக் கூறப்பட முடியும். எடுத்துக்காட்டாக, சீனாய் மலையிலும் (யாத்திராகமம் 19:16, 19), பத்மு தீவிலும் (1:10), கவனத்தை ஈர்ப்பதற்காக, எக்காளமுழக்கம் போன்ற சத்தம் பயன்படுத்தப் பட்டதை கவனியுங்கள். மீண்டுமாக, டொமீஷியனைப் போல், பார்வோனும் ஒரு கடவுளாக வணங்கப்பட்டு வந்தான், யாத்திராகமத்தின் வரலாறு, கள்ளத்தீர்க்கதரிசி (பாலாம்) ஒருவனைக் கொண்டிருந்தது, இது வெளிப்படுத்தின விசேஷத்தில் கள்ளத்தீர்க்க தரிசியைப் பற்றிக் கூறப்படுவதைப் போலவே உள்ளது.* [46]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப் பட்டால், நீங்கள் வசனம் 6ல் உள்ள, "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே*

*நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி" என்ற வார்த்தைகளுக்குத் திரும்ப விரும்பலாம். இரத்தத்தினால் கழுவப்பட்டவர்களுக்கு மாத்திரமே வாக்குத்தத்தங்கள் உரியவைகளாய் இருக்கின்றன - ஒருவர் தமது பாவங்கள் இரத்தத்தால் கழுவப்படுவதற்கு, ஞானஸ்நானம் பெறவேண்டும் (நடபடிகள் 22:16).* [47]Peterson, 609. [48]*உங்கள் பகுதியில் உள்ள அதிகாரத்துவத்தின் முத்திரை எதையாவது இங்கு பயன்படுத்த முடியும்.* [49]Mounce, 1926. *வெளிப்படுத்தின விசேஷத்தின் பாக்கியங்கள் பற்றிய பாடங்கள் பின்வரும் புத்தகங்களில் காணப்படுகின்றன:* 1992 Harding University Lectureship book *Vision of Victory: The Book of Revelation,* and D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, Publishers, 1961), 60-61.

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

*1. வசனம் 1ல் உள்ள "சீக்கிரத்தில் சம்பவிக்கவேண்டியவைகள்," மற்றும் வசனம் 3ல் உள்ள "காலம் சமீபமாயிருக்கிறது" என்ற சொற்றொடர்களின் தனிச்சிறப்பு என்ன?*

*2. முதல் நூற்றாண்டில் வசனத்தை பொதுவில் வாசித்தல் என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது? இது இன்றைய நாட்களில் இன்னமும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளதா? ஏன்?*

*3. "ஆசியா" என்ற சொற்றொடரின்மூலம் வெளிப்படுத்தின விசேஷம் அர்த்தப்படுத்துவது என்ன? அது எங்கே அமைந்திருக்கிறது? வரைபடத்தில் இதைக் கண்டறிய முயற்சி செய்யவும்.*

*4. இந்தப் பாடத்தின்படி, வசனம் 4ல் ஏழு ஆவிகள் என்பதினால் குறிக்கப்படுபவர் யார்? இந்தச் சொற்றொடரில் "ஏழு" என்பதன் தனிச்சிறப்பு என்ன?*

*5. வசனம் 8, "அல்பாவும் ஒமெகாவும்" என்று குறிப்பிடுகிறது. அல்பா மற்றும் ஒமெகா என்றால் என்ன? இந்தச் சொற்றொடர்களைக் கர்த்தருக்குப் பயன்படுத்தும்போது இவைகள் அர்த்தப் படுத்துவது என்ன?*

*6. இந்தப் பாடத்தில், யாத்திராகமத்திற்கும் உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்கள்மீது தேவன் கொண்டிருந்த அக்கறைக்கும் இடையில் பல ஒப்பீடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உங்களால் எத்தனை ஒப்பீடுகளை நினைவுக்குக் கொண்டுவர முடியும்?*

*7. உங்களுக்குத் தனிப்பட்ட விதத்தில் உதவக்கூடிய எதையாவது நீங்கள் இந்தப் பாடத்தில் கற்றீர்களா? அவை என்ன?*